

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் விக்கிரவாண்டி தொகுதி காணை, கோலியனூர் ஒன்றிய ஆலோசனைக்கூட்டம் காணை வசந்த மாளிகை திருமண மண்டபத்தில் நடைபெற்றது. உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு விக்கிரவாண்டி தொகுதி இடைத் தேர்தல் வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை அறிமுகம் செய்து விக்கிரவாண்டி தொகுதி வரலாற்று வெற்றியை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கரங்களில் ஒப்படைப்பது குறித்து ஆலோசனைகளை வழங்கினர். மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.பொன் கௌதம சிகாமணி, மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தேர்தல் மேலிடப் பொறுப்பாளர் குணவழகன், மாவட்டச் செயலாளர்கள் பெரியார், விடுதலை செல்வன், அறிவுக்கரசு, ஒன்றியச் செயலாளர்கள் கல்பட்டு இராஜா, ஆர்.முருகன், ஆர்.பி.முருகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### மன்னார்குடி பட்டாசு ஆலை வெடிவிபத்தில் உயிரிழந்த

# சதீஷ்குமார் குடும்பத்தாருக்கு ஆறுதல்: ரூ.3 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 18-

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி, பாமணி வருவாய் கிராமம், வெள்ளங்குழி அருகே இயங்கி வந்த தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் ரூபாய் 3 லட்சம் நிதியுதவி - வழங்குவது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், பாமணி வருவாய் கிராமம், வெள்ளங்குழி(தேவேந்திரபுரம்) என்ற இடத்தில் இயங்கிவந்த தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் நேற்று முன்தினம் (16.06.2024) பிற்பகல் 1.45 மணியளவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் சதீஷ்குமார் (வயது 34) த/பெ. மனோகரன் என்பவர் பலத்த தீக்காயங்களுடன் மன்னார்குடி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும், வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### மோடி தலைமையிலான அரசு இன்னும் 5 மாதத்தில் கவிழ்ந்து விடும்!

# விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் எதிர்க்கட்சியினர் டெபாசிட் இழப்பார்கள்!

## ஈரோட்டில் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் பேட்டி!

ஈரோடு, ஜூன் 18 -

ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

சென்னையில் கடந்த 11 ந் தேதி காமராஜர் இல்லத்தில் காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எல்லோரும் காங்கிரஸ் கட்சியை வளர்க்க வேண்டும் என்றும், நடைபயணம் செல்ல வேண்டும், அதிக அளவில் பூத் கமிட்டி அமைக்கப்பட வேண்டும், இளைஞர்களை அதிக அளவில் காங்கிரஸ் கட்சியில் சேர்க்க வேண்டும் என அவர் தெரிவித்த கருத்து முரணாக எடுத்துக் கொள்ளப்பட்டது. அதுகுறித்து செல்வபெருந்தகை விளக்கமளித்து விட்டார்.

உள்ளாட்சி தேர்தலில் கூட்டணி வைக்க வேண்டாம் என முன்னாள் எம்.பி. ஒருவர் கருத்து சொன்னார். அதற்கு எதிர்ப்பு கிளம்பியது. உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட போது கூட்டணி வைத்தால் தான் வெற்றி பெற வாய்ப்பு கிடைக்கும்.

காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பல இடத்தில் மேயர் மற்றும் கவுன்சிலராக இருப்பதற்கு கூட்டணி தான் காரணம். கூட்டணி இருந்தால் தான் மக்களை சந்திக்கவும் வெற்றி பெறவும் வாய்ப்பாக அமையும். கூட்டணிக்குள் சில கருத்து வேறுபாடுகள், பிரச்சினைகள் இருப்பது சகஜம். வரும் உள்ளாட்சி தேர்தலில் தி.மு.க.வுடன் கூட்டணி வைத்து தான் காங்கிரஸ் போட்டியிடும். அதில் எந்த மாற்றமும் இல்லை.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எதைப்பற்றியும் கவலைப்படாமல் மக்கள் பணியில் பணியாற்றி வருகிறார். அவர் ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் தலைவராக விளங்குகிறார். எனவே அவரது கரங்களையும் ராகுல் காந்தியின் கரங்களையும் வலுப்படுத்த வேண்டும் தற்போது நாம் வளர வேண்டும் என்பதைவிட ஏற்கனவே வளர்ந்து விட்ட பா.ஜா.க மற்றும் மோடி என்னும் தீய சக்தியை ஒழிக்க ஒற்றுமையுடன் பாடுபடவேண்டும்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சி பொற்காலம் ஆட்சி என்று சொல்வதற்கு பதிலாக நவீனத்திற்கு ஏற்ப ஸ்டாலின் ஆட்சி காமராஜர் ஆட்சி என்று சொல்வேன்.

தமிழகத்தில் உள்ள இளைஞர்கள் படித்தவர்களாக இருப்பதற்கு காரணம் காமராஜர். அவர் மதிய உணவுத் திட்டத்தை



கொண்டு வந்தார்.

தற்போது எத்தனையோ நிதி நெருக்கடி இருக்கும் சூழலிலும் அனைத்து அரசு பள்ளிகளில் காலை உணவு திட்டம் கொண்டு வரப்பட்டது.

மதிய உணவு தந்த காமராஜருடன் காலை உணவு தந்த மிழ்நாடு முதல மைச்சர் மு.க.ஸ்டாலினை ஒப்பிடுவது என்ன தவறு. தமிழகத்தில் உள்ள தாய்மார்கள் மு.க.ஸ்டாலின் பின்னால் நிற்கிறார்கள்.

நான்கு முனை போட்டியில் வாக்குகள் சிதற தான் செய்யும். கடந்த தேர்தலில் மூன்று முனை போட்டி ஏற்பட்டது. நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலில் பா.ம.க, பாரிவேந்தர், ஏ.சி.சண்முகம் போன்றவர்களால் தான் பா.ஜ.க.வுக்கு வாக்கு சதவீதம் உயர்ந்துள்ளது.

தமிழிசை சவுந்தரராஜனை அமித்ஷா மேடையில் திட்டி எச்சரிக்கை செய்தது கண்டிக்கத்தக்கது. கட்சி பாகுபாடு இன்றி அவர் தமிழச்சியாக இருப்பதால் அதனை நான் கண்டிக்கிறேன்.

முஸ்லிம்கள் 25 சதவீதம் பேர் உள்ள நிலையில் ஒருவருக்கு கூட பா.ஜ.க சீட் கொடுக்கவில்லை. அப்படி இருக்கும் போது இந்தியாவுக்கு எப்படி பொதுவான அரசாக இருக்க முடியும். காங்கிரஸ் கட்சி நாடாளுமன்ற எதிர்கட்சி தலைவராக ராகுல்காந்தி வர வேண்டும்.

நீட் தேர்வு குளறுபடி காரணமாக தான் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆரம்பம் முதல் நீட் வேண்டாம் என்றார். தற்போது கேட்டால் காங்கிரஸ் தான் நீட் தேர்வு கொண்டு வந்தது என்பார்கள். காங்கிரஸ் நீட் தேர்வு கொண்டு வந்த போது மாநிலங்கள் விருப்பத்தின் பேரில் நடந்து கொள்ளலாம் என்று சொன்னது.

விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் எதிர்க்கட்சியினருக்கு டெபாசிட் கூட கிடைக்காது. காங்கிரஸ் கட்சி சார்பில் தலைவர் செல்வப்பெருந்தகையும், நானும் பிரச்சாரம் செய்வோம்.

இன்னும் மோடி தலைமையிலான ஆட்சி 5 மாதங்களில் கலைந்து விடும். இதற்கு பா.ஜ.க கூட்டணியில் உள்ள கட்சிகளே காரணமாக இருக்கும் என ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் செய்தியாளர்களிடம் கூறினார்.

### குவைத் தீ விபத்தில் உயிரிழந்த

# முட்டம் சின்ன துரை குடும்பத்திற்கு ரூ.5 லட்சம் நிதி!

## குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வழங்கினார்!

கடலூர், ஜூன் 18 -

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் குவைத் தீ விபத்தில் உயிரிழந்த சின்னதுரை குடும்பத்தினருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கான காசோலையை வழங்கினார்

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டம், முட்டம் கிராமம் மேலத்தெருவைச் சேர்ந்த சின்னதுரை த/பெ.கிருஷ்ணமூர்த்தி (வயது 42) என்பவர் குவைத் நாட்டில் கடந்த 12.06.2024 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் மரணம் அடைந்தார்.

ஒன்றிய, மாநில அரசுகளின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முயற்சியினால் குவைத் நாட்டிலிருந்து சின்னதுரையின் உடல் வரவழைக்கப்பட்டு கடந்த 15- 06- 2024 அதிகாலை 1.00 மணியளவில் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டு, நல்லடக்கம் செய்யப்பட்டது.

மேற்படி சின்னதுரை குடும்பத்தினருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ரூ 5,00,000 (ஐந்து லட்சம்) நிவாரண தொகை உடனடியாக வழங்க உத்தரவிடப்பட்டது.

அதனடிப்படையில் நேற்று முன்தினம் (16- 06- 2024 ) அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் அ.அருண் தம்புராஜ் முன்னிலையில் சின்னதுரை மனைவி திருமதி சத்யாவுக்கு ரூபாய் 2,50,000 (இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ) மற்றும் தாய் திருமதி சரோஜாவுக்கு ரூபாய் 2,50,000 (இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ) என ரூபாய் 5,00,000க்கான காசோலையை வழங்கி ஆறுதல் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சார் ஆட்சியர் சிதம்பரம் செல்வி ரஷ்மிராணி, மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

### நீலகிரி நாடாளுமன்றத் தொகுதியில்

# ஆ.இராசா எம்.பி.யை வெற்றி பெற வைத்த வாக்காளர்களுக்கு நன்றி!

## நீலகிரி மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

நீலகிரி, ஜூன் 18-

நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் மாவட்டக் கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட அவை தலைவர் போஜன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் அனைவரையும்வரவேற்றார். மாவட்ட துணைச் செயலாளர்கள் ரவிகுமார், லட்சுமி, மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் காசிலிங்கம், இளங்கோவன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணை செயலாளர் பொன்தோஸ், மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை செயலாளர் அன்வர்கான், மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் பரமேஸ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நகர செயலாளர்கள் ஜார்ஜ், ராமசாமி, இளஞ்செழியன் பாபு, ஒன்றிய கழக செயலாளர்கள் லியாகத் அலி, பரமசிவன், காமராஜ், லாரன்ஸ், பிரேம்குமார், நெல்லை கண்ணன், பீமன், சிவானந்தராஜா, சுஜேஷ், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் கருப்பையா, சதக்கத்துல்லா, தொரை, பில்லன், செல்வம், அமிர்தலிங்கம், வீரபத்திரன், மோகன்குமார், பேரூர் கழக செயலாளர்கள் பிரகாஷ்குமார், உதயகுமார், சதீஷ்குமார், நடராஜ், சுந்தரராஜ், முத்து, சுப்ரமணி, சின்னவர், சஞ்சீவ்குமார், ரமேஸ்குமார், காளிதாஸ், மார்டின், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் இமயம் சசிகுமார், கோமதி, காந்தல்ரவி, எல்கில்ரவி, விவேகானந்தன், ராமச்சந்திரன், ஜெயந்தி, ஆலன், ராம்குமார், பவீஷ், வெங்கடேஷ், சிவசுப்ரமணியம், ஜெயகுமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் நாகராஜ், பத்மநாபன், முரளிதரன், வினோத்குமார், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் சுனிதா, கீர்த்தனா, மாயன், நகராட்சி தலைவர்கள் வாணீஸ்வரி, பரிமளா, சிவகாமி, பேரூராட்சி தலைவர்கள் கலியமூர்த்தி, கௌரி, ஜெயகுமாரி, ஹேமமாலினி, சத்தியவாணி, சித்ரா தேவி, வள்ளி, பங்கஜம், சிறப்பு அழைப்பாளர்கள் தொமுச மாவட்ட கவுன்சில் செயலாளர் ஜெயராமன், தொ.மு.ச. மண்டல பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன், தோட்ட தொழிலாளர் தொ.மு.ச. பொதுச்செயலாளர் செல்வராஜ் உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்ட முடிவில் மாவட்டப் பொருளாளர் நாசர் அலி நன்றி கூறினார்.

கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

**தமிழ்நாடு வாக்காளர்களுக்கு நன்றி!**

கடந்த 19.4.2024 அன்று தமிழகம் மற்றும் புதுச்சேரி உட்பட 40 நாடாளுமன்ற தொகுதிகளுக்கும் தேர்தல் நடந்தது இதன் முடிவுகள் கடந்த 4.6.2024 அன்று வெளியானதில் தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி வேட்பாளர்கள் 40 பேர் மாபெரும் வெற்றிப்பெற்றுள்ளனர்.

இந்திய ஜனநாயகம் காப்பாற்றப்பட, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் இலட்சியங்களுக்கு எல்லாம் வாரிசாக திகழ்ந்து நம்மையெல்லாம் வழிநடத்தும் கழக தலைவர் முதல்வர் அவர்கள் தலைமையில் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை தமிழக மக்கள் முழுமையாக தேர்வுசெய்துள்ளனர். இது கடந்த 3 ஆண்டுகளுக்கும் மேலாக சிறப்புமிக்க கழக அரசிற்கு கிடைத்துள்ள மிகப்பெரிய அங்கீகாரமாகவும், நம் கழக தலைவர் அவர்கள் மீது தமிழக மக்கள் வைத்துள்ள நம்பிக்கையின் வெளிப்பாடாகவும் அமைந்துள்ளது.

இந்த மாபெரும் மகத்தான வெற்றி கிடைப்பதற்காக கழக முன்னணி தலைவர்களுடன் கலந்தாலோசித்து, கூட்டணி கட்சிகளை ஒருங்கிணைத்து, கழக வேட்பாளர்களை சரியாக தேர்வுசெய்து ஓய்வின்றி உழைத்து, ஒவ்வொரு கழக தொண்டர்களும், தமிழக மக்களும் மகிழும் வகையில் கழக தலைவர் தமிழக முதல்வர் அவர்களும், இளைஞர்களின் எழுச்சி நாயகன், கழக இளைஞர் அணி செயலாளர் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் மேற்கொண்ட தேர்தல் பிரச்சாரம் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியதின் பயனாக இந்த மாபெரும் வெற்றி கிடைத்துள்ளது. இந்த வெற்றியின் மூலம் நம் தலைவர் தளபதி அவர்கள் தேசிய தலைவர்கள் வரிசையில் இடம் பிடித்துள்ளார் என்பது நமக்கெல்லாம் பெருமை ஆகும்.

இதற்காக, கழக தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர் உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகள், தமிழ்நாடு முழுவதும் நமது தலைவர் அவர்களின் 40/40 என்கிற இலட்சியத்தினை நிறைவேற்றிட உழைத்து ஒவ்வொரு கழக தொண்டர்களுக்கும் இக்கூட்டம் நெஞ்சார்ந்த நன்றியினையும், வாழ்த்துகளையும் தெரிவித்து மகிழ்கிறது.

**தொகுதி வாக்காளர்களுக்கு நன்றி!**

நீலகிரி நாடாளுமன்ற தொகுதியில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளராக கழக தலைவர் முதல்வர் அவர்களால் முன்னாள் மத்திய அமைச்சர் - கழக துணை பொதுச் செயலாளர் ஆ.இராசா அறிவிக்கப்பட்டார்.

நீலகிரி மக்கள் நலனில் பெரிதும் அக்கறை கொண்டு தனக்கு பொறுப்புகள் இல்லாத காலங்களிலும்கூட நீலகிரிக்கு வருகை தந்து இரவு பகல் பாராமல் நீலகிரியில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பு காலங்களிலும் மக்களோடு மக்களாகவே தன்னை அர்ப்பணித்த ஆ.இராசா அவர்களை கடந்த 2019ம் ஆண்டு தேர்தலை விட அதிகமாக வாக்களித்து சுமார் 2.40 லட்சத்திற்கும் மேலான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிப்பெற செய்த நீலகிரி நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட வாக்காளர்களுக்கும், இந்த மாபெரும் வரலாற்று சிறப்புமிக்க வெற்றியை அறுவடை செய்ய கடும் உழைப்பினை வழங்கிய கழக நிர்வாகிகளுக்கும், வெற்றிக்காக உடன் உழைத்த தோழமைக் கட்சிகளின் நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும் நீலகிரி மாவட்ட திராவிட முன்னேற்ற கழக செயற்குழு கூட்டம் தனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்து மகிழ்கிறது.

இவ்வாறு அக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் தினம் 400 பேர் பயணிக்க

# திருப்பதி தொகுப்பு ஒரு நாள் சுற்றுலா திட்டம்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 18-

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஒரு நாள் சுற்றுலா திட்டமான, திருப்பதிதொகுப்பு சுற்றுலா திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு 400 நபர்கள் வரை சுற்றுலா செல்லலாம் என்று சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினால் இயக்கப்பட்டு வரும் சுற்றுலா திட்டங்களில் அதிக அளவில் பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டு வரும் சுற்றுப்பயணம், திருப்பதி ஒரு நாள் சுற்றுலாவாகும். திருப்பதி சுற்றுலா செல்லும் பேருந்து, சென்னை வாலாஜாசாலை, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைமை அலு



வலகமான சுற்றுலா வளாகத்திலிருந்து தினசரி காலை 4.30 மணிக்குசுற்றுலாபயணிகளைஅழைத்துசெல்கின்றது.

ஒவ்வொரு பேருந்திலும் சுற்றுலா பயணிகளுக்கு ஒரு சுற்றுலா வழிகாட்டி பணியில் ஈடுபடுவார். வழிகாட்டிகள் திருப்பதி சுற்றுலா பயணிகளுக்கு தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சுற்றுலா பயணத்திற்கான விளக்கங்களை அளிப்பார். சுற்றுலா பயணிகளுக்கு காலை உணவு திருத்தணி ஓட்டல் தமிழ்நாடு உணவகத்தில் வழங்கப்படுகின்றது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு, திருப்பதி தேவஸ்தானம் சிறப்பு அனுமதியாக வழங்கிய விரைவு தரிசன அனுமதி சீட்டின் மூலம் சுற்றுலா பயணிகள் தரிசனம் செய்த பின்னர் சுற்றுலா பயணிகள் அனைவருக்கும் நபர் ஒருவருக்கு திருப்பதி லட்டு ஒன்று வழங்கப்படுகின்றது. மேலும் மதிய உணவுக்கு பின் திருச்சானூர் சென்று பத்மாவதி அம்மனை தரிசனம் செய்த பிறகு இரவு உணவு வழங்கப்பட்டு மீண்டும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் சுற்றுலா பயணிகளை கொண்டு சேர்த்து திருப்பதி சுற்றுலா பயணம் முடிவு பெறுகின்றது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பயணத் திட்டங்களுக்கு முன் பதிவு செய்ய தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் www.ttdconline.com இணையதள பக்கத்திலும், அல்லது சென்னை வாலாஜா சாலையில் செயல்பட்டுவரும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் நேரடியாகவும் முன்பதிவு செய்யலாம்.

திருப்பதி சுற்றுலா குறித்த கூடுதல் விவரங்களை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தொலைபேசி எண்களை (180042 531111 (Toll free), 044 25333333 மற்றும் 044 25333444) தொடர்பு கொண்டு பெறலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### குடந்தை திருபுவனம்

# ‘லிங்கன் சில்க்ஸ்’ பத்மாவதி அம்மையார் மறைவு!

## சாக்கோட்டை அன்பழகன் எம்.எல்.ஏ. - செ.இராமலிங்கம் அஞ்சலி!

குடந்தை, ஜூன் 18-

திருபுவனம் ஸ்ரீபாண்டு ரெங்கன் பஜனை மடம் ஸ்தாபகர் ஸ்ரீமான் ஜி. சொக்கலிங்கம் பிள்ளை அவர்களின் மனைவியும், திருபுவனம் லிங்கம் சில்க் உரிமையாளர் சி.ஜானகிராமன் அவர்களின் அன்புத் தாயாருமான சி.பத்மாவதி அம்மாள் இயற்கை எய்தினார்.

அன்னாரது இறுதி ஊர்வலம் நேற்று முன்தினம் (16.06.2024) மாலை 3.00 மணி அளவில் அவரது இல்



லத்தில் இருந்து புறப்பட்டு இறுதிச்சட ங்குகள் நடைபெற்றது.

இச்செய்தியறிந்ததும், சாக்கோட்டை அன்பழகன் எம்.எல்.ஏ., முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், நகரச் செயலாளர் ஆச்சி, பிரபல நாதஸ்வர வித்வான் செம்பனார் கோவில் சகோதரர்கள் எஸ்.ஆர்.ஜி. ராஜன்னா, வலங்கைமான் எஸ்.ஏ.எஸ். சந்திரசேகர், சுவாமிமலை மணிமாறன், திருவிசை நல்லூர் டி.பி.ஜே. செல்வரத்தினம் ஆகியோர் அன்னாரது இல்லம் சென்று மறைந்த சொ.பத்மாவதி அம்மையார் உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

### ஈரோடு – திருப்பூர் தொகுதி வேட்பாளர்கள் வெற்றி!

# பாடுபட்ட கழக நிர்வாகிகளுக்கு பாராட்டு விழா!

## ஈரோடு வடக்கு மாவட்டச் செயலாளர் என்.நல்லசிவம் தலைமை!

ஈரோடு, ஜூன் 18-

ஈரோடு வடக்கு மாவட்டம் டி.என்.பாளையம் ஒன்றிய கழகத்தின் சார்பில் திருப்பூர் நாடாளுமன்ற தொகுதி இந்தியா கூட்டணி கட்சிகளின் வேட்பாளரை வெற்றி பெற வைத்த கழக நிர்வாகிகளுக்கு பாராட்டு விழா மற்றும் 10 மற்றும் 12ஆம் வகுப்புகளில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கும் விழா மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் நடைபெற்றது.

ஈரோடு வடக்கு மாவட்டம் டி.என்.பாளையம் ஒன்றிய கழகத்தின் சார்பில் ஒன்றிய கழக செயலாளர் எம்.சிவபாலன் ஏற்பாட்டில் மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் இந்தியா கூட்டணி கட்சிகளின் கம்யூனிஸ்டு கட்சியின் வேட்பாளர் சுப்பராயனை திருப்பூர் நாடாளுமன்ற தொகுதியில் வெற்றி பெற வைத்த கழக நிர்வாகிகளுக்கு பாராட்டு விழா மற்றும் அரசு பள்ளியில் பயின்று 10 மற்றும் 12ஆம் வகுப்புகளில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு ஊக்க தொகை வழங்கும் விழா 23.6.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு டி.என்.பாளையம் கே.வி. மஹாலில் நடைபெற உள்ளது.

விழாவில் ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சருமான சு.முத்துசாமி, திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், முன்னாள் சத்தி சட்டமன்ற உறுப்பினர் டி.கே.சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளனர்.

விழாவின் இறுதியில் டி.என்.பாளையம் ஒன்றிய அவைத்தலைவர் டி.கே. கருப்புசாமி நன்றியுரையாற்றவுள்ளார்.